JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-6 Witness
for Prosecution

| STC.No. | 531/2024 | Crime No. | 112/2024 | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| Name | PW.6–பகவதியம்மாள் | Village | |
|---|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 25.03.2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஈரோடு மாவட்டம் குற்றப்பதிவேடுகள் ஆவண காப்பகத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் பவானி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணியில் இருந்தபோது கடந்த 23.02.2024–ம் தேதியன்று காலை 10.00 மணிக்கு நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் சித்தையசாமி என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது பவானி அரசு மருத்துவமனையில் இருந்து பெறப்பட்ட தாண்டாயி என்பவரது Referred RTA இன்டிமேஷனை பெற்று பெருந்துறை ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அங்கு தாண்டாயி மயக்க நிலையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்ததால் அவரை விசாரணை செய்ய இயலவில்லை. நிலையம் திரும்பி வந்தார். பின்னர் மேற்படி காயம்பட்ட தாண்டாயி என்பவரது பேரன் பிரகாஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று அன்றைய தினம் மாலை 16.00 மணிக்கு நிலைய குற்ற எண் .112/ 2024, சட்டப்பிரிவுகள் 279, 337 IPC கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற நான் அன்றைய தினம் மாலை 17.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான சந்தோஷ் மற்றும் மோகன்ராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்ட பார்வை மகசரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.25 18:56:20 +0530

பின்னர் சாட்சிகள் பிரகாஷ், தாண்டாயி, சின்ராசு, மோகன்ராஜ் மற்றும் சந்தோஷ் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். 01.03.2024 ஆம் தேதியன்று நிலையம் ஆஜராகி குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரி சூர்யா என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும், தக்க நிலைய பிணையில் விடுவித்தேன்.

பின்னர் விபத்தில் தொடர்புடைய வாகனங்களின் ஆவணங்களை பெற்று மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். 08.05.2024 ஆம் தேதியன்று மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ரவிக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். **TN 52 K 5068 என்ற பதிவு எண் கொண்ட BAJAJ CT 100 பைக்கின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

சாட்சி தாண்டாயி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சந்தோஷ்வரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, காயச்சான்று பெற்றேன். **விபத்து பதிவேட்டுன் கூடிய காயைச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மருத்துவர் தான்டாயிக்கு ஏற்பட்டக் காயம் கொடுங்காயம் என சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவை 279, 337 IPC இருந்து சட்ட பிரிவுகள் 279, 338 IPC ஆக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து கடந்த 08.05.2024 ஆம் தேதியன்று எதிரி மீது சட்ட பிரிவுகள் 279, 338 IPC கீழ் இறுதி அறிக்கையை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் எதுவும் பெறப்படவில்லை என்றாலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல எதிரியின் கவனக்குறைவாக இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல

**மறு விசாரணை இல்லை.**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.25 18:56:30 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani